செய்தி வெளியீடு எண் : 829 நாள்: 24.05.2022

<u>தேர்தல் அறிவிப்பு</u>

(தேர்தல் நடத்துவதற்குரிய விதிகள் 1961–இன் விதி 3–ஐ காண்க)

**மாநிலங்களவைக்கு நடைபெறும் தேர்தல்**

**(29.06.2022–ஆம் நாளன்று 6 உறுப்பினர்களது பதவிக்காலம் நிறைவு பெறுவதால் ஏற்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக)**

இதனால் அறிவிக்கப்படுவது யாதெனில்:–

1. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை வாக்காளர்களாகக் கொண்டு மாநிலங்களவைக்கு 6 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க தேர்தல் நடைபெற உள்ளது.

2. வேட்பாளர் அல்லது அவருடைய பெயரை முன்மொழிபவர்களில் எவரேனும் ஒருவர், **முனைவர் கி. சீனிவாசன், தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம்** அவர்களிடம் அல்லது திரு. கே. ரமேஷ், உதவி தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் துணைச் செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம் அவர்களிடம், சென்னை–600 009, சட்டமன்றப் பேரவைச் செயலகத்திலுள்ள அலுவலகத்தில் எந்நாளிலும், (முறையே வங்கி விடுமுறை மற்றும் பொது விடுமுறை நாட்களான 28.05.2022 மற்றும் 29.05.2022 நீங்கலாக) முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணிக்குள்ளாக 31.05.2022–ஆம் நாளுக்கு மேற்படாதவாறு வேட்பு மனுக்களை அளிக்கலாம்.

3. மேலே குறிப்பிடப்பெற்றுள்ள நேரம் மற்றும் இடத்தில், வேட்பு மனு படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. வேட்பு மனுக்கள், சென்னை–600 009, சட்டமன்றப் பேரவைச் செயலக செயலாளர் அலுவலகத்தில் 01.06.2022–ஆம் நாளன்று முற்பகல் 11.00 மணியளவில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

5. வேட்பாளர் விலகலுக்கான அறிவிப்பை, வேட்பாளர் அல்லது அவரது பெயரை முன்மொழிபவர்களில் ஒருவர் அல்லது வேட்பாளரால் எழுத்து மூலம் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அவரது தேர்தல் முகவர், மேலே பத்தி 2–இல் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் எவரிடத்திலேனும் அவரது அலுவலகத்தில் 03.06.2022–ஆம் தேதி பிற்பகல் 3.00 மணிக்குள் அளிக்கலாம்.

6. தேர்தலில் போட்டி இருப்பின், 10.06.2022–ஆம் நாளன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரையில், சென்னை–600 009, தலைமைச் செயலகப் பிரதானக் கட்டடத்தின் தரைத்தளத்தில் அமைந்துள்ள சட்டமன்றப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் வாக்குப் பதிவு நடைபெறும்.

இடம் : சென்னை – 600 009,
நாள் : 24.05.2022

**(முனைவர் கி. சீனிவாசன்)**
**தேர்தல் நடத்தும் அதிகாரி மற்றும் செயலாளர்**
**தமிழ் நாடு சட்டமன்றப் பேரவைச் செயலகம்**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in